RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# இலக்கியங்களில் மண்பாண்டக் கலை

**ந. அமிர்தக்கொடி [அ, *]**

[அ]தமிழ்த்துறை, பி.கே,ஆர். மகளிர் கலைக்கல்லூரி, கோபிசெட்டிபாளையம்-638476, இந்தியா

# Pottery Art in Tamil Literature

**N. Amirthakodi [a, *]**

[a] Department of Tamil, P.K.R Arts College for Women, Gobichettipalayam-638476, Tamil Nadu, India

* Corresponding Author:
amirtha.kodi3@gmail.com

**ABSTRACT**

The Sangam Age (c. 3rd century BCE to 3rd century CE) is widely regarded as a golden period that reflects the richness of Tamil society in terms of art, culture, and economic prosperity. During this era, pottery emerged as a significant craft and an integral component of everyday life. This research article examines the various dimensions of pottery art during the Sangam period by drawing upon evidence from archaeological excavations and references found in Sangam literature. Particular attention is given to the pottery unearthed at archaeological sites such as Adichanallur, Arikamedu, Kodumanal, and Keeladi. Archaeological findings provide valuable insights into the types of pottery produced, manufacturing techniques, decorative motifs, inscriptions, graffiti marks, and their functional uses. Pottery plays an indispensable role in understanding ancient civilizations and reconstructing their cultural history. From the Sangam period to the present day, earthenware has remained an essential element in the daily lives of people. These pottery artifacts serve as important indicators of the lifestyle, trade relations, and artistic skills of the people of the Sangam Age. Soil itself represents a fundamental marker of human identity, and material remains preserved in clay function as valuable tools for understanding the heritage and traditions of ancient communities. As pottery art is deeply intertwined with Tamil cultural life and traditional modes of living, this study highlights the significance of pottery as a craft rooted in nature and as a vital expression of Tamil heritage and civilization.

**Keywords:** Pottery, Archaeological findings, Keeladi, Tamil heritage, Sangam Age.

## முன்னுரை

சங்க காலம் (கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு வரை) தமிழகத்தின் கலை, பண்பாடு, பொருளாதாரம் ஆகியவற்றின் செழுமையை வெளிப்படுத்தும் ஒரு பொற்காலமாகக் கருதப்படுகிறது. இக்காலத்தில் மட்பாண்டக் கலை ஒரு முக்கியத் தொழிலாகவும், அன்றாட வாழ்வின் ஒரு பகுதியாகவும் விளங்கியது. இந்த ஆய்வுக் கட்டுரை சங்க கால மட்பாண்டக் கலைகளின் பல்வேறு பரிமாணங்களையும், தொல்லியல் அகழாய்வுகள் மற்றும் சங்க இலக்கியச் சான்றுகளின் அடிப்படையிலும் ஆராயப்படுகிறது. குறிப்பாக, ஆதிச்சநல்லூர், அரிக்கமேடு, கொடுமணல், கீழடி போன்ற இடங்களில் கிடைத்த மட்பாண்டங்களின் வகைகள், உருவாக்கும் முறைகள், அவற்றின் அலங்காரங்கள், கல்வெட்டுகள், கீறல் குறியீடுகள், மற்றும் பயன்பாடுகள் குறித்து தொல்லியல் தரவுகள் பற்றிக் கூறுகின்றன. சங்க காலத்து மட்பாண்டத் தொழில்நுட்பத்தின் சிறப்பு, பொருளாதார முக்கியத்துவம், மற்றும் சமூகப் பண்பாட்டுப் பங்களிப்பு ஆகியவற்றை விரிவாக அறிவதே இந்த ஆய்வின் நோக்கமாகும்.

## மட்கலத் தொழில்

தமிழர் மண்பாண்டங்களை அல்லது தமிழர் வனைதற்தொழில் என்பது தமிழர்கள் மரபுரீதியாக மண்பாண்டகளை உருவாக்கும் கலையை குறிக்கும் தமிழ்நாட்டில் இன்றும் இக்கலை நிலை பெற்றிருக்கின்றது. இத்தொழில் கலையில் ஈடுபடுபவர்கள் குயவர் எனப்படுவர் மண் பாண்டங்களை உருவாக்குவது குறிப்பாக குயவர் சக்கரத்தின் கண்டுபிடிப்பு உலக நாகரிகத்தின் ஒரு மைல்கல்லாகும்.

குயவர் சக்கரம் எகிஃது அல்லது மெசொபொத்தேமியா அல்லது சீனாவிலோ கண்டுபிடிக்கப்பட்டு வட இந்தியா வந்து சில காலம் சென்று தென்னிந்தியா வந்தது. புதிய கற்கால மனிதன் பயிர்த்தொழில் செய்யவும், விலங்குகளை பழக்கவும,; நெசவு முதலிய தொழில்களை கற்கவும், நேர்ந்தது மக்கள் உணவுப் பொருள்களை சேமித்து வைக்க மண்பாண்டகளை செய்து கொண்டனர். இவர்களுக்கு முன் வாழ்ந்த மக்கள் விலங்குகளின் தோழி நாளாகிய பைகள் தாவர கனிகளின் ஓடுகள் போன்றவற்றை பயன்படுத்தினர்.

சங்ககாலத்தில் மண்பாண்ட தொழில் பரவலாக்கம் பெற்று இருந்தது. அதனை தனித்த தொழிலாக செய்துள்ளனர.; எனவே அவர்களை களம் செய்கோ என பெயரிட்டு அழைத்துள்ளனர். இதனை கலம் செய் கோவே என்னும் புறநானூற்று பாடல் வழி அறிய முடிகின்றது. மேலும் அவர்கள் வேட்கோ என்றும் அழைக்கப்பட்டுள்ளனர் எனவும் சிறுவயது முதலே இத்தொழிலை மேற்கொள்கின்றனர் எனவும் தெரிய வருகின்றது.

"அச்சுடைக் சாகாட்டு ஆரம்" (புறம்: 256)

மண்பாண்டங்கள் மக்களுக்கு பலவகையில் பயன்பட்டது. அதற்கு பல பெயர்களும் அமைக்கப்பட்டுள்ளது. உணவு சமைத்ததற்குரிய களம் ஆடுகளம் என்றும் நீர் நிலைத்து வைப்பதற்குரிய களம் மக்களும் என்றும் கூறப்படுகிறது. இறந்தவர் உடலை பெரிய மட்கலத்தில் வைத்து புதைப்பர். இதனை தாழிகள் என்றும் அழைத்தனர்.

## மண்பாண்டங்கள்

மண்பாண்டங்கள் என்பது மண், களிமண் போன்ற இயற்கை பொருட்களால் வடிவமைத்து, உலர்த்தி, வெப்பத்தில் சுட்டு உருவாக்கப்படும் பானைகள், கருவிகள், பொம்மைகள் போன்ற பொருட்களைக் குறிக்கும். தமிழர் வாழ்க்கை, கலாச்சாரம் மற்றும் வரலாற்றில் மண்பாண்டங்களுக்கு முக்கியமான இடம் உண்டு. மட்பாண்டம் செய்பவர்கள் 'குயவன்' என்று அழைக்கப்பட்டனர், மேலும் அவர்கள் ஒரு குறிப்பிட்ட தொழில் குழுமமாகவே வாழ்ந்தனர். இத்தொழில், விவசாயம், நெசவு போன்ற தொழில்களோடு முக்கிய இடம் வகித்தது, மேலும் உணவுப்பொருட்கள் மற்றும் நீர் சேமிப்பு போன்ற அன்றாடத் தேவைகளுக்கு மட்பாண்டங்கள் பெரிதும் பயன்பட்டன.

## மண்பாண்டத் தொழிலாளர்களின் வளர்ச்சி

பண்டைய நாகரிகங்களைப் புரிந்துகொள்வதில் மட்பாண்டங்கள் ஒரு முதன்மையான கருவியாக விளங்குகின்றன. மனித சமுதாயத்தின் தொன்மைக் காலம் தொட்டே மட்பாண்டத் தொழில் வளர்ச்சி அடைந்து வந்துள்ளது. உணவு சமைப்பதற்கும், சேமிப்பதற்கும், நீரைப் பெறுவதற்கும், சடங்குகளுக்கும், ஏன் இறந்தோரைப் புதைப்பதற்கும் கூட மட்பாண்டங்கள் பயன்பட்டன. இவை அன்றாட பயன்பாட்டுப் பொருட்கள் என்பதையும் கடந்து, அக்கால மக்களின் கலைத்திறன், தொழில்நுட்ப அறிவு, வணிகத் தொடர்புகள், சமூகப் பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை பிரதிபலிக்கும் கலைப் பொருட்களாகவும் வரலாற்று ஆவணங்களாகவும் திகழ்கின்றன. தமிழகத்தின் பொற்காலமாகக் கருதப்படும் சங்க காலத்தில் (கி.மு. 300 - கி.பி. 300), மட்பாண்டக் கலை அதன் உச்சத்தை அடைந்திருந்தது. சங்க கால மட்பாண்டக் கலைகளைப் பற்றி அறிவதற்கு நமக்கு இரண்டு வகையான ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

அவை

- தொல்லியல் தளங்களில் நடத்தப்பட்ட அகழாய்வுகளில் கண்டெடுக்கப்பட்ட ஆயிரக்கணக்கான மட்பாண்ட ஓடுகள் மற்றும் முழு மட்பாண்டங்கள.;;
- சங்க இலக்கியப் பாடல்களில் மட்பாண்டங்கள், குயவர்கள், அவற்றின் பயன்பாடு குறித்த வரும் குறிப்புகள்.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட பல அகழாய்வுகள் குறிப்பாக ஆதிச்சநல்லூர், அரிக்கமேடு, கொடுமணல், கீழடி, பொருந்தல் போன்றவை சங்க கால மக்களின் மட்பாண்டப் பயன்பாடு மற்றும் தொழில்நுட்பம் குறித்த ஏராளமான தரவுகளை வெளிக்கொண்டுள்ளன. அதே சமயம், சங்க இலக்கியங்கள் புறநானூறு, அகநானூறு, பதிற்றுப்பத்து, சிலப்பதிகாரம், மணிமேகலை போன்றவை அன்றைய சமூகத்தில் மட்பாண்டங்களின் பங்கு குறித்தும், அவற்றைத் தயாரித்த குயவர்களின் நிலை

குறித்தும் கூறப்படுகின்றன. பொருந்தல், திண்டுக்கல் மாவட்டம் பொருந்தலில் நடந்த அகழாய்வுகள் சங்க கால வாழ்வியல் தடயங்களை வெளிப்படுத்துகின்றன.. இங்கு கிடைத்த நெல் மணிகளுடன் கூடிய மட்பாண்டங்கள், தமிழ் பிராமி எழுத்துக்களுடன் கூடிய மட்பாண்டங்கள் ஆகியவை சங்க கால வேளாண்மை, வணிகம் மற்றும் எழுத்தறிவு குறித்துப் புதிய தகவல்களைத் தந்துள்ளன.

## மட்பாண்டங்களின் வகைகள் மற்றும் தொழில்நுட்பம்

சங்க காலத்தில் பலதரப்பட்ட மட்பாண்டங்கள் புழக்கத்தில் இருந்துள்ளன. அவற்றில் முக்கியமானவை:

## கருப்பு-சிவப்பு பானை ஓடுகள்

இந்த மட்பாண்டங்களின் அடிப்பாகம் கருப்பாகவும், மேற்புறம் சிவப்பாகவும் இருக்கும். இந்த வகை மட்பாண்டங்கள் அன்றாட பயன்பாட்டிற்கும், சில சடங்குகளுக்கும் பயன்பட்டுள்ளது. இவை தமிழகம் முழுவதும் பரவலாகக் காணப்படுகின்றன.

## சிவப்பு பானை ஓடுகள்

சமையல், சேமிப்பு போன்ற பல்வேறு பயன்பாடுகளுக்குரிய பானைகள் இந்த வகையைச் சேர்ந்தவை. இவை நன்கு சுடப்பட்டு, பல்வேறு அளவுகள் மற்றும் வடிவங்களில் கிடைக்கின்றன. சிவப்பு பானை ஓடுகள் என்பது பழங்கால மனிதர்கள் பயன்படுத்திய சிவப்பு நிறத்தில் செய்யப்பட்ட மண் பானைகளின் உடைந்த துண்டுகள் ஆகும். இவை தொல்லியல் அகழாய்வுகளில் அடிக்கடி கிடைக்கும் முக்கியமான பொருட்களில் ஒன்றாகும்.

## காலகட்டம்

சிவப்பு பானைகள் பல காலகட்டங்களிலும் காணப்படுகின்றன

- இரும்புக்காலம்
- ஆதி வர்த்தக காலங்கள்
- பிற்கால பானைச் சூழல்கள்
- பயன்பாடுகள்

## சிவப்பு பானைகள் பொதுவாக பயன்படுத்தப்பட்டவை:

- உணவு சேமிப்பு பானைகள்
- சமையல் பானைகள்
- நீர் அல்லது தானியக் குவளைகள்சடங்கு
- மறைவுச் சடங்கு பொருட்கள்
- கருப்பு பானை ஓடுகள்

இவை பளபளப்பான மேற்பரப்புடன் காணப்படும். பெரும்பாலும் உணவு உண்ணும் தட்டுகள், கிண்ணங்கள் போன்றவை ஆகும். சில சமயங்களில் இவை நன்கு தேய்க்கப்பட்டு மெருகூட்டப்பட்டிருக்கும்.

## அலங்கார மட்பாண்டங்கள்

சில பானைகளின் மேற்பரப்பில் கோடுகள், புள்ளிகள், வலைப் பின்னல்கள் போன்ற வடிவங்களைக் கீறியோ, அச்சுகளைப் பயன்படுத்தியோ அலங்காரம் செய்யப்பட்டுள்ளது. ஆதிச்சநல்லூரில் கிடைத்த சில பானைகளில் விலங்கு, பறவை உருவங்கள் சித்திரிக்கப்பட்டுள்ளன.

## எழுத்துக் கீறல்கள் மற்றும் குறியீடுகள்

பல பானை ஓடுகளில் தமிழ் பிராமி எழுத்துக்களில் பெயர்கள் அல்லது சொற்கள் எழுதப்பட்டுள்ளன. சிலவற்றில் மீன், அம்பு, சூரியன் போன்ற குறியீடுகள் காணப்படுகின்றன. இவை மட்பாண்டத்தின் உரிமையாளர், தயாரிப்பாளர் அல்லது வணிகக் குறியீடுகள்.

## வெளிநாட்டு மட்பாண்டங்கள்

இது உள்நாட்டு மட்பாண்டத் தொழிலுக்கும் புதிய தொழில்நுட்பங்களைக் கற்றுக் கொடுத்துள்ளது. பெரும்பாலான சங்க கால மட்பாண்டங்கள் சக்கரத்தைப் பயன்படுத்தி நேர்த்தியாகச் செய்யப்பட்டுள்ளன. இது அக்கால குயவர்களின் தொழில்நுட்பத் தேர்ச்சியைக் காட்டுகிறது. பானைகளைச் சூளையில் இட்டுச் சுடும் தொழில்நுட்பமும் நன்கு அறிந்திருந்தனர்.

## இலக்கியத்தில் மட்பாண்டம்

பண்டைய நாளில் பெரும்பான்மையான மாந்தர் மண்பாண்டகளையே பயன்படுத்தினர். இவர்கள் வேட்டுகோவர்கள் கலஞ்செய்கோ எனப்பட்டனர்.

“வேட்கோச் சிறாஅர் தேர்க்கால்” (புறம் 32)

குயவர் சிறுவர் விளையாடுகையில் தந்தையைப் போல பானை செய்யும் சக்கரத்தில் வைத்த ஈரக் களிமண் போல அவன் மழை இருக்கும் புறநானூற்றில் குழந்தைகள் களிமண்ணில் பானை செய்து விளையாடும் குறிப்பு இடம்பெற்று உள்ளன. பெரிய தாழிகளில் சவங்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளன. அவை செந்நிறமாக இருந்தன குடை தட்டுகள் ஜாடி, பானை தீபம் போன்ற பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. இது அழகும் பயனும் சேர்ந்த தொழிலாகும். பண்டை நாளில் பெரும்பான்மையான மக்கள் மண்பாண்டங்களைப் பயன்படுத்தினர். மட்கலம் செய்யும் மக்கள் குயவர்கள் எனப்படுகின்றனர். பச்சை மண்ணால் செய்த கலத்தைச் சூளையில் இட்டு எரித்து புனைவது மட்கலம் எனப்பட்டது.

“அச்சுடைக் சாகாட்டு ஆரம்” (புறம்.256)

என்ற வரிகள் மூலம் மண்பாண்டம் செய்ய சக்கரம் என்ற கருவி பயன்பட்டன. மண்பானையை சுடாமல் அப்படியே பயன்படுத்தினால் அது பயனற்று போகும். அதனால் அதனைச் சுட்டு பயன்படுத்த வேண்டும் என்பதை உணர்த்துகிறது. சங்க காலத்தில் மக்கள் இறந்த பிறகு அவ்வுடலைத் தாழியைக் கொண்டு புதைத்தனர். இதனை,

“கவி செந்தாழிக் குவிபுறத் திருந்த

செவிசெஞ் சேவலும் பொகுவலும் வெருவர்” (புறம்.238)

என்பதால் மக்கள் தாழிகளைப் பயனப்டுத்தினர் என்றும் அத்தாழி செந்நிறமாக உள்ளது என்றும் தெளிவாகிறது. மண்பாண்டங்களை மக்கள் சங்ககாலம் முதல் இன்று வரை பயன்படுத்தி வருகிறார்கள். இத்தொழில் அன்று முதல் இன்று வரை இருந்து வருகிறது என்பது புறநானூற்றின் மூலம் அறிய முடிகிறது.

சங்க காலத்தில் மட்பாண்டத் தொழில் பரவலாக இருந்தது. மட்பாண்டங்களைச் செய்வோர் அதனைத் தனித்த தொழிலாகச் செய்துள்ளனர். எனவே அவர்களைக் கலம்செய்கோ எனப் பெயரிட்டு அழைத்துள்ளனர். இதனை,

“கலம் செய் கோவே! கலம் செய் கோவே!” (புறம்.228)

என்னும் புறநானூற்றுப் பாடல் வழி அறிய முடிகின்றது. மேலும் அவர்கள் வேட்கோ என்றும் அழைக்கப்பட்டுள்ளனர். எனவும் சிறுவயது முதலே இத்தொழிலை மேற்கொண்டுவந்தனர் எனவும்,

“வேட்கோ சிறாஅர் தேர்க்கால் வைத்த

பசுமண் குரு உத்திரன் போல” (புறம்.32)

புறநானூற்றுப் பாடல் குறிக்கின்றது. மட்பாண்டத் தொழில் குடும்பத்தொழிலாக இருந்து வந்துள்ளது. மட்பாண்டங்கள் பெரும்பாலும் கொள்கலனாகவே காட்டப்படுகின்றன. பானை, நீர்க்கன்னல், இறந்தோரைப் புதைக்க பயன்படுத்திய தாழிகள் முதலியவை சங்க இலக்கியங்களில் காட்டப்படுகின்றன. பானைகள், குழிசி, தசும்பு, மண்டை, உறி, கரகம் எனப்பல பெயர்களால் குறிக்கப்படுகின்றன.

மட்பாண்டங்கள் செய்ய ஈர மண்ணைப் பயன்படுத்தியுள்ளனர். ஈரமான பானை தனித்தனியாக சுடப்படாமல் மொத்தமாக சுடுவார்கள். இப்படி பானைகளைச் சுடுவதால் ஏற்படும் புகை மலையையே மறைப்பதற்கு,

“இலங்குமலை புதைய வெண்மழை கவைஇ

கலம்சுடு புகையின் தோன்றும் நாட” (அகம்.308)

என்னும் அகநானூற்றுப் பாடல்வரிகள் உணர்த்துகின்றன.

“பாணர் பசுமீண் சொரிந்த மண்டை” (குறுந்.169)

என்னும் பாடல் மீனைச் சேகரிக்க மண்பானையைப் பயன்படுத்தியதைக் காட்டுகின்றது. மேலும், மண்பானைகள் தயிரை வைக்கவும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

“தயிர் கொடு வந்த தசும்பு” (புறம்.33)

எனும் புறநானூற்றுப் பாடலடி இதனைப் புலப்படுத்துகின்றது.

“உறி தாழ்ந்த கரகம்” (பெரும்.56)

“இமிழ் இசை மண்டை உறியொடு” (கலி.106)

போன்ற பாடல் பானைகளை வீட்டில் தொங்கவிட உறிகளைப் பயன்படுத்தியமையைக் காட்டுகின்றது.

## முடிவுரை

சங்ககால மக்கள் எத்தொழிலைச் செய்தாலும் அவற்றைக் கலைநயத்தோடும், தொழில்நுட்பத்தோடும் செய்தனர். பழங்காலத்தில் பின்பற்றப்பட்ட முறைகள் இன்று பின்பற்றப்படும்போது தொழில்நுட்பங்கள் மாறவில்லை. தொழில்நுட்பக் கருவிகளே மாறி உள்ளன. சங்க இலக்கியங்களில் குறிக்கப்படுவது போன்று சாமானியரின் புழங்கு பொருளாக பலவகைப் பானைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதிலும் குறிப்பாக சங்கப் பாடல் குறிப்பது போல தங்கள் பெயர்களைப் பானைகளில் எழுதி பயன்படுத்தியுள்ளனர். உலோகங்கள் பயன்படுத்தப்பட்ட காலமாயினும் சங்க காலத்தில் மட்பாண்டங்களே மக்கள் பயன்பாட்டில் பெரும் இடம் பிடித்துள்ளன. நாகரிகம் வளர்ச்சி அடைந்த போதிலும் இன்றளவும் மண்பாண்டத்தினை மக்கள் தேவைகளுக்கேற்ப பயன்படுத்தி வருகின்றனர். முன்னோர்களின் பண்பாட்டையும் கலைகளையும் போற்றிப் பாதுகாப்பது நமது கடமையாகும்.

## References


சுப்பிரமணியன், தி. (2016) தொல் பழங்காலம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை

சங்க இலக்கியங்கள் மூலமும் உரையும் - வர்த்தமானன் பதிப்பக வெளியீடு.

இராசமாணிக்கனார், மா. (2009) தமிழகக் கலைகளும் கல்வெட்டுக்களும், பூம்புகார் பதிப்பகம், சென்னை.

சக்திவேல், சு. நாட்டுப்புறவியல் ஆய்வுகள், மணிவாசகர் பதிப்பகவெளியீடு

இராமநாதன், ஆறு. (1991), நாட்டுப்புறவியல் ஆய்வுமுறைகள், தமிழ்ப் பல்கலைக் கழகம்.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License